# திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.1783/அ1/2022 நாள். .03.2022

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஆவடி கல்வி மாவட்டம், அத்திவாக்கம், அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.மாயுவராஜ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள்.18.05.2018
2.திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1962/அ1/2020 நாள். 17.09.2020
3. ஆவடி, மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.245/அ1/2022, நாள்: 07.02.2022

--------

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி கல்வி மாவட்டம், அத்திவாக்கம், அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.மா.யுவராஜ் என்பார் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி -IV நேரடி நியமனம் மூலம் பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின் படி, அத்திவாக்கம், அரசு உயர்நிலைப் பள்ளியில் 21.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி- IV நேரடி நியமனம் செய்யப்பட்டதாலும், கல்விச்சான்றுகளின் உண்மைத்தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 3-இல் காணும் ஆவடி, மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளருக்கு தற்போது அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள்.18.05.2018-இன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)இல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண் பருவகாலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் திரு.மாயுவராஜ் என்பாருக்கு 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.மாயுவராஜ், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, அத்திவாக்கம். | 21.09.2020 முற்பகல் | 21.09.2020 முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக)
மாவட்டக்கல்வி அலுவலர், ஆவடி

நகல்

தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, அத்திவாக்கம்.